# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்கள் முன்பாக

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*************

முறையீட்டு மனு எண்.0159/2015

ஆணை எண்.005/2015

நாள்: 21/09/2015

திரு.P. சத்தியமூர்த்தி,
இளநிலை உதவியாளர் (ஓய்வு),
1/32, M.G.R. நகர், 2வது கிராஸ்,
சின்ன ஆண்டாங்கோவில் ரோடு,
கரூர். - முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
கரூர் நகராட்சி,
கரூர் - எதிர் மனுதாரர்

கரூர் மாவட்டம், கரூர் நகராட்சி, எம்.ஜி.ஆர். நகர், சின்ன ஆண்டாங்கோவில் ரோடு, 2வது கிராஸ், 1/32 இலக்கமிட்ட முகவரியில் வசிக்கும் திரு. P. சத்தியமூர்த்தி அவர்கள், கரூர் நகராட்சி மேலாளர் மற்றும் நகராட்சி ஆணையர் மீதான புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 159/2015 எண்ணிட்ட புகார் மனுவாக பதிவு செய்யப்பட்டது.

# ஆணை

கரூர் மாவட்டம், கரூர் நகராட்சியில் இளநிலை உதவியாளராக 35 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்ற திரு. P. சத்தியமூர்த்தி அவர்கள், தான் நகராட்சியில் சிறப்பாக பணியாற்றியதற்கு ஊக்குவிக்கும் வகையில் தனக்கு அரசு ஆணை எண்.390 நிதித்துறை நாள் 07.11.2012ன்படி வழங்கப்படவேண்டிய ரொக்கப்பரிசு ரூ.2000/– மற்றும் நற்சான்றிதழும் வழங்காமல் காலம் தாழ்த்துவதாக கரூர் நகராட்சி மேலாளர் மற்றும் ஆணையர் மீது புகார் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். மேற்படி புகார் கடிதத்தில் தனக்கு வழங்கபடவேண்டிய ஊக்கத்தொகை மற்றும் நற்சான்றிதழும் உடன் கிடைக்கச் செய்வதுடன் தாமதத்திற்குக் காரணமான அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

2. மேற்படி மனுதாரரின் கோரிக்கை சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கையை கோரியதில், மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய ரொக்கப்பரிசு ரூபாய் 2000/– மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டுவிட்டது என்று 10.09.2015 நாளிட்ட கடிதத்தில் கரூர் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேற்படி கரூர் நகராட்சி ஆணையர்அனுப்பிய கடிதத்தினை மனுதாருக்கு தகவலுக்காக அனுப்ப இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், இம்மாதிரியான நேர்வுகளில் காலம் தாழ்த்தாமல் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட நகராட்சி அலுவலர்களுக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

ஒம்/– முனைவர் சோ. அய்யர்
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

//உண்மை நகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது//

21/9/15
கண்காணிப்பாளர்

பெறுநர்

திரு.P. சத்தியமூர்த்தி,
இளநிலை உதவியாளர் (ஓய்வு),
1/32, M.G.R. நகர், 2வது கிராஸ்,
சின்ன ஆண்டாங்கோவில் ரோடு,
கரூர். (இணைப்புடன்)

நகராட்சி ஆணையர்,
கரூர் நகராட்சி,
கரூர்.

மேலாளர்,
கரூர் நகராட்சி,
கரூர்.